**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**------**

# IN THE COURT OF THE ASSISTANT SESSIONS JUDGE, UTHANGARAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary register | : | Sessions Case No.163 of 2019 |
| Sessions | : | |

| | | | |
|---|---|---|---|
| Deposition of witness for | : | Prosecution | : PW- 9 |
| | | Defence | : |
| | : | Court | : |

| | |
|---|---|
| Name | : Sivakumar |
| Father's Name | : Theerthagiri |
| Village | : |
| Taluk | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 17st day of October 2024.**

முதல் விசாரணை:

நான் தற்போது நாய்கனூர் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். பெரியதளாபாடியில் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 05.04.2019 அன்று சிங்காரபேட்டை காவல் ஆய்வாளர் அழைத்ததன் பேரில் நானும் எனது கிராம உதவியாளர் மகாலட்சுமியும் மிட்டபள்ளி பிரிவுரோடு அருகில் சென்ற போது சிங்காரபேட்டை காவல் ஆய்வாளர் அவர்களும் பிரசாந்தும் பாரதிராஜவும் இருந்தார்கள். அவர்கள் அருகில் ஏமாக வண்டி ஒன்று இருந்தது. அந்த வண்டியை கைப்பற்றியதற்காகவும் எதிரிகளை பிடித்தற்காகவும் சாட்சி கையெழுத்து போடும் படி கூறியதால் நானும் மகாலட்சுமியும் ஒப்புதல் வாக்குமூலத்திலும் கைபற்றுதல் மகஜரிலும் கையொப்பம் செய்தோம். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு ஒப்புதல் வாக்குமூலத்திலும் மற்றும் கைபற்றுதல் மகஜரிலும் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்து என்னுடையது தான். அவை முறையே அ.சா.ஆ 4 , 5 ,6 ஆகும். அங்கிருந்து போலிசார் எங்களை பெரியதளப்பட்டி கிராமத்தில் உள்ள பாரதிராஜா வீட்டிற்கு சென்றோம். போலிசார் பாரதிராஜா வீட்டிற்குள் சென்று கத்தியை எடுத்து வந்தார்கள் நான் வீட்டிற்கு வெளியில் நின்று இருந்தேன். பிறகு அங்கு வைத்தும் போலிசார் ஒரு ஒப்புதல் வாக்குமூலம் தயார்செய்து கையெழுத்து வாங்கியதாக சாட்சி கூறிவிட்டு பிறகு கத்தியை கைபற்றியதற்காக கையெழுத்து வாங்கியதாக மாற்றி சாட்சி அளிக்கிறார். பிறகு அங்கு இருந்து பிரசாந்த் வீட்டிற்குள் சென்று போலிசார் கத்தியை எடுத்து வந்தார்கள் நான் வீட்டிற்கு வெயியில் நின்று இருந்தேன். அங்கு கத்தியை எடுத்ததற்காக போலிசார் என்னிடமும் உதவியாளரிடமும் சாட்சி கையெழுத்து வாங்கினார்கள். தற்போது என்னிடம் காட்டப்படும் இரண்டு கைபற்றுதல் மகஜர்களிலும் உள்ள முதலாவது சாட்சி கையெழுத்துக்கள் என்னுடையது தான் அவை முறையே அ.சா.ஆ. 7, 8 ஆகும். தற்போது என்னிடம் காட்டப்படும் கத்திகள் தான் போலிசார் என் முன்னிலையில் கைபற்றியதாகவும் அவை முறையே சான்று பொருள் 3,4 ஆகும். கைப்பற்றபட்ட பொருள்களையும் எதிரிகளையும் போலிசார் காவல் நிலையம் அழைத்து சென்றார்கள். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்:

எதிரிகளை போலிசார் எப்போது கைது செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. மிட்டபள்ளி பிரிவு ரோடு என்பது பொது மக்கள் அதிகம் நடமாட்டம் உள்ள பகுதி என்றால் சரிதான். நான் டைப் செய்த தாலில் கையெழுத்து செய்தேன். ஏற்கனவே டைப் செய்து எடுத்து வந்தார்களா

என்றால் ஆம். ஒப்புதல் வாக்கு மூலத்தில் என் முன்னிலையில் யார் கையெழுத்த செய்தார்கள் என்றால் நானும் உதவியாளரும் கையெழுத்து செய்தோம் வேறுயாரும் கையெழுத்து செய்யவில்லை. எதிரி வீட்டிற்குள் நான் சென்றேனா என்றால் இல்லை. போலிசாரே கத்தியை பாக்கெட்டில் வைத்து எடுத்து வந்திருக்கலாம் என்றால் அது பற்றி தெரியாது. கத்தியில் இரத்த கறை எதுவும் இல்லை என்றால் சரிதான். எதிரிகள் இடம் இருந்து என் முன்னிலையில் சான்று பொருள் எதுவும் கைப்பற்றபட வில்லை என்றும் நான் போலிசாரின் கையிறுப்பு சாட்சி என்றும் சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

ஒம்/- திருமதி. G.கலைவாணி, பி.ஏ., பி.எல்.,
சார்பு நீதிபதி, சார்பு நீதிமன்றம்,
ஊத்தங்கரை.